என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும்

நிதி - வணிகம் - முதலீடு

(தனிச் சுற்றுக்கு மட்டும்) மலர் - 1, இதழ் - 4, 1.7.2026 பக்கம்: 24 மின்னிதழ்

தங்கத்தை லீஸுக்கு விடலாமா?

சேதுராமன் சாத்தப்பன்
Advisor,
NKC Finance Private Limited

முதலீட்டாளர்கள் பயன்படுத்தாமல் வைத்திருக்கும் தங்கத்தை விற்காமல் அதன் மூலம் வருமானம் ஈட்டலாமா?

இந்தியாவில் மக்களிடையே வீடுகளில் சுமார் 25,000 டன் தங்கம் இருக்கிறது. இவை காலம் காலமாக சேமிக்கப்பட்டவை. வருடந்தோறும் இந்தியா சுமார் 700 முதல் 1000 டன் வரை தங்கத்தை இறக்குமதி

செய்து வருகிறது. அதுதான் இந்தியாவிற்கு பெரிய அந்நிய செலாவணி வெளியேற காரணமாக இருக்கிறது. அதை தவிர்க்க இந்தியாவில் மக்களிடம் கையிருப்பு இருக்கும் தங்கத்தில் சுமார் 3 சதவீதத்தை அவர்கள் லீசுக்கு விட்டார்கள் என்றால் டாலருக்கு எதிராக நமது ரூபாய் இவ்வளவு தூரம் செல்லாது, நமது அந்நிய செலாவணி இருப்பும் அதிகமாகும்.

தங்கம் நீண்ட காலமாக ஒரு மதிப்பு சேமிப்பாகக் கருதப்பட்டு வருகிறது, ஆனால் தற்போது அதிகரித்து வரும் பல தளங்கள், முதலீட்டாளர்கள் தங்கள் கைவசம் உள்ள தங்கத்தை விற்காமலேயே அதன் மூலம் வருமானம் ஈட்ட அனுமதிக்கின்றன. தங்க லீஸ் மூலம், தனிநபர்கள் தங்கள் தங்கத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நகைக்கடைக்காரர்களுக்குக் கடனாகக் கொடுத்து, அந்தச் சொத்தின் உரிமையைத் தக்க வைத்துக் கொண்டே வருமானம் ஈட்டலாம்.

தங்க லீஸ் எவ்வாறு செயல்படுகிறது, அதன் நன்மைகள், அபாயங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் இதில் பதிவு செய்வதற்கு முன் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய காரணிகள் என்ன என்று பார்ப்போம்.

தங்க லீஸ் என்றால் என்ன?

தங்க லீஸ் என்பது, தனிநபர்கள் தங்கள் தங்கத்தை ஒரு லாக்கர்,

பெட்டகம் அல்லது அலமாரியில் பயன்படுத்தாமல் சும்மா வைத்திருப்பதற்குப் பதிலாக, அதன் மூலம் வருமானம் ஈட்ட அனுமதிக்கும் ஒரு செயல்முறையாகும். ஃபின்டெக் நிறுவனங்களின் தங்கக் குத்தகைத் தளங்கள் மூலம், வாடிக்கையாளர்கள் தங்கள் தங்கத்தை அங்கீகரிக்கப்பட்ட நகைக்கடைக்காரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கடனாகக் கொடுக்கிறார்கள். நகைக்கடைக்காரர்கள் அந்தத் தங்கத்தைத் தங்கள் வணிகச் செயல்பாடுகளுக்கு சரக்கு இருப்பு அல்லது நகையாக செய்து விற்பதற்கு மூலதனமாகப் பயன்படுத்துகிறார்கள், அதே நேரத்தில் தங்கத்தின் உரிமையாளர்கள், அடிப்படைச் சொத்தின் உரிமையை விட்டுக்கொடுக்காமல், பொதுவாகக் கூடுதல் தங்கத்தின் வடிவில் ஒரு லீஸ் வாடகையைப் பெறுகிறார்கள்.

இது எவ்வாறு செயல்படுகிறது?

நகை வியாபாரி உள்நாட்டில் சொந்தமான தங்கத்தை குத்தகைக்கு எடுக்கும் போது, இது தங்க இறக்குமதியை நேரடியாகக் குறைக்கிறது, இல்லையெனில் அந்த நகை வியாபாரி தங்களுக்குத் தேவையான தங்கத்தை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். முக்கியமாக, ஒரு தங்க உலோக லீஸ், நகை வியாபாரிகளுக்கான இருப்பு விலை அபாயத்தைக் குறைக்கிறது. இந்த வழியில், நகை வியாபாரிகள் உள்நாட்டிலேயே தங்கத்தை பெறுகிறார்கள். இதன் மூலம் இறக்குமதியை நேரடியாகக் குறைக்கிறார்கள்.

நகை வியாபாரிகளுக்கு, வங்கிகளிடமிருந்து கடன் வாங்குவது அல்லது தங்கக் கட்டிகளை நேரடியாக இறக்குமதி செய்வதை விட, லீசுக்கு வாங்குவது தங்க இருப்புக்கான மலிவான வழியாக இருக்கிறது. இதன் மூலம், அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் வணிக விரிவாக்கத்திற்காகப் பணத்தை மிச்சப்படுத்த முடிகிறது.

தங்க இருப்புக்கான வங்கிக் கடனுக்கு வழக்கமாக 10-12 சதவீதம் செலவாகும் நிலையில், தங்கக் கட்டிகளை வாங்குவதில் கணிசமான பணத்தை முடக்குவதற்குப் பதிலாக, நகை வியாபாரிகள் குறைந்த பயனுள்ள செலவில் லீசுக்கு தங்கத்தைப் பெற்று, அந்த மூலதனத்தை

வணிக வளர்ச்சி, இருப்பு மேலாண்மை மற்றும் செயல்பாடுகளில் பயன்படுத்தலாம்.

ஒழுங்குமுறை கட்டமைப்பு?

தங்க லீஸ் தற்போது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) நேரடி ஒழுங்குமுறையின் கீழ் வராது. இருப்பினும் டிஜிட்டல் கோல்டு தொழில், டிபிஎம்ஏசிஐ (டிஜிட்டல் பிரெஷியஸ் மெட்டல்ஸ் அஷ்யூரன்ஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா) என்ற அமைப்பின் கீழ் வரும்.

காப்பீட்டுப் பாதுகாப்பு

லீசுக்கு விடப்பட்ட தங்கம் தற்போது எந்த கடன் காப்பீட்டின் கீழும் பாதுகாக்கப்படவில்லை என்பதை முதலீட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். டிஜிட்டல் தளங்கள் மூலம் லீசுக்கு விடப்படும் தங்கம் பாதுகாப்பைப் பெறுவதில்லை. சில தளங்கள், கடன் வாங்கும் நகை வியாபாரியிடமிருந்து வங்கி உத்தரவாதத்தைப் பெறுவதன் மூலம் இந்த அபாயத்தைக் குறைக்க முயல்கின்றன, இது கடன் தவறும் பட்சத்தில் பிணையமாகச் செயல்படுகிறது.

நுகர்வோருக்கான அபாயங்களும் நன்மைகளும்

தங்கத்தைக் குத்தகைக்கு விடுவது, நுகர்வோர் தங்கத்தை விற்காமல், பயன்படுத்தாமல் வைத்திருப்பதன் மூலம் வருமானம் ஈட்ட அனுமதிக்கிறது.

லீஸ் மூலம் கிடைக்கும் வருமானம் தற்போது 2.75 சதவீதம் முதல் 4.5 சதவீதம் வரை உள்ளது.

இருப்பினும், இந்தத் துறை தற்போது இந்திய ரிசர்வ் வங்கியால் நேரடியாக ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதை வாடிக்கையாளர்கள் அறிந்திருக்க வேண்டும்.

கடன் காப்பீடு இல்லாதது மற்றொரு முக்கிய அபாயமாகும். வங்கி வைப்புத்தொகைகளைப் போலல்லாமல், லீசுக்கு விடப்பட்ட தங்கம் வைப்புத்தொகைக் காப்பீட்டின் மூலம் பாதுகாக்கப்படுவதில்லை. இதன் பொருள், கடன் வாங்கிய நகை வியாபாரி தவணை செலுத்தத் தவறினால், முதலீட்டாளர்கள் இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

NKC Finance Private Limited
Board

Dr. E. Gnanam,
Chairman

Thiru. PL. Ramasamy,
Managing Director

Thiru. S.Chidambaram,
Joint Managing Director

Thiru. O. Somasundaram,
Director

Thiru. Sethuraman Sathappan,
Advisor

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

N K C Finance Private Limited

We Listen you Prosper

நம்பகமான, பாதுகாப்பான முதலீட்டுக்கு

எங்கள் கம்பெனியின் 10 சதவிகித வட்டியுடனான பாதுகாப்பான கடன் பத்திரங்கள்

பத்திரத்தின் தன்மை	பாதுகாப்பான கடன் பத்திரங்கள் (secured Non convertible Debentures)
வட்டி விகிதம்	10% p.a. (மூன்று மாதத்திற்கு ஒரு முறை)
குறைந்த பட்ச முதலீட்டு தொகை	ரூ.3,00,000/=
அதிக பட்ச முதலீட்டு தொகை	தலா ஒரு லட்சம் வீதம் ரூ.99 லட்சம் வரை
குறைந்த பட்ச முதலீட்டு காலம்	மூன்று வருடம்
அதிக பட்சம் முதிர்வு தேதி	30-09-2029 மூன்று வருடம் கடந்ததும் பத்திரத்தை மீட்டுக்கொள்ளும் வசதி உண்டு
முதலீட்டு காலத்திற்கு முன் திரும்பப்பெறும் வசதி	குறைந்த பட்சம் ஒரு வருடம் முடிந்திருக்கவேண்டும். ஒரு வருடத்திற்கு பிறகு மூன்று வருடங்களுக்குள் மீட்டுக்கொள்ளும் சமயம் 0.5 வட்டி பிடித்தம் செய்யப்படும்.
வருமான வரி	வருமான வரி சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு 10 சதவிகிதம் வரி பிடித்தம் செய்யப்படும். வரிவிலக்கு வேண்டுபவர்கள் தகுந்த விண்ணப்ப படிவம் கொடுத்து விலக்கு பெற்றுக் கொள்ளலாம்.

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(RBI Registration No. N-07-00846)

பதிவு அலுவலகம் 25,
எழும்பூர் நெடுஞ்சாலை
எழும்பூர், சென்னை 600 008

Phone Numbers:
92800 85934 & 92800 85935
(Email: nkcfin18@gmail.com)
www.nkcfinance.com

(For Private Circulation only)

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் திரு. O. சோமசுந்தரம் அவர்களுடன் பேட்டி

அ. ஹுமாயூன்,
சிதம்பரம்

நகரத்தார் சமூகம் தமிழகத்தின் பாரம்பரிய வணிக சமூகங்களில் ஒன்றாகும். பழங்காலத்தில் கிராமங்கள் மற்றும் சிறு வணிகர்களுக்கு வங்கிச் சேவைகள் எளிதில் கிடைக்காத சூழலில், நகரத்தார்கள் நிதி உதவி வழங்கி இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வணிக வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றினர். நேர்மை, நம்பகத்தன்மை மற்றும் கணக்குப் பராமரிப்பில் அவர்கள் புகழ்பெற்றவர்களாக இருந்தனர்.

அந்த புகழ் பெற்ற சமுதாயத்தை சேர்ந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குநர் திரு. O. சோமசுந்தரம் அவர்களை நமது நிதி-வணிகம்-முதலீடு இதழுக்காக பேட்டி கண்டோம்.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?

NBC என்ற என்பிசி வாட்ஸ் குழுமத்தில் நான் உறுப்பினராக இருந்தபொழுது (2017-18) NBC குழு உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஒரு தொழிலை தொடங்கி முன் உதாரணமாக இருக்கலாம் என்ற கலந்துரையாடல் நடைபெற்று, NBFC நிறுவனம் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு முடிவு எட்டப்பட்டபொழுது அந்த முடிவிற்கு நானும் உடன்பட்டு கருத்து தெரிவித்தேன். அந்த தருணம் இந்த நிறுவனத்திற்கு அடிக்கல் என்று கூறலாம்.

திரு. O. சோமசுந்தரம் தம்பதியினர்

எப்போது இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது?

NBFC ஆரம்பிக்கலாம் என்ற ஒரு முடிவு எட்டிய பின் பாரத ரிசர்வ் வங்கி அனுமதி வாங்குவது சம்பந்தமான அலுவல்களை கவனிப்பதற்கு ஒரு குழு 2018ல் அமைக்கப்பட்டு என்னையும் உறுப்பினராக சேர்க்கப்பட்டு 2018 ஏப்ரல் மாதம் ரிசர்வ் வங்கிக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டு டிசம்பர் மாதம் அனுமதி பெற்று உச்சநீதிமன்ற நீதியரசர் Dr. AR. லெட்சுமணன் அவர்களின் திருக்கரங்களால் இந் நிறுவனம் துவங்கப்பெற்றது.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் போர்டில் எவரெல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள்?

இதர இயக்குனர்களுடன், நிதித்துறையில் அனுபவம் பெற்றவர்களும் கண்டிப்பாக இயக்குனர்களாக இருக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிவுரை இருக்கிறது. அதன்படி தொழில் துறையில் முதிர்ந்த அனுபவமும், ஆளுமையும் கொண்ட முத்து ஃபார்மஸி குழுமத்தின் தலைவர் மேலைச்சிவபுரி டாக்டர். ஏ.ஞானம் அவர்களின் தலைமையில், மேலைச்சிவபுரி திரு. பழ.ராமசாமி அவர்கள் நிர்வாக இயக்குனராகவும், பலவான்குடி திரு. S. சிதம்பரம் அவர்கள் இணை நிர்வாக இயக்குனர், இவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உதவி பொது மேலாளராக (AGM)

36 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் பெற்று வங்கியில் ஓய்வு பெற்றவர் மற்றும் சண்முகநாதபுரத்தை சேர்ந்த நான் இயக்குனராகவும் இருந்து வருகிறோம். மேலும் உள்நாடு மற்றும் வெளிநாடு வங்கிகளில் முதிர்ந்த அனுபவம் உடைய நெற்குப்பை திரு. சேதுராமன் சாத்தப்பன் அவர்கள் இயக்குனர் குழுமத்துக்கு உறுதுணையாக நிதி ஆலோசகர் என்ற முறையில் பல அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள்.

என்ன வகையான கடன்கள் கொடுக்கப்படுகின்றன?

அசையா சொத்து / நகை அடமானம் / ஈடு என்ற முறையில் பொதுவாக கடன்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நிறுவனத்தின் தொழில் அதிகரித்து வருகின்ற நிலையில், தனி நபர் கடன், சொத்து அடமானம் இல்லாத கடன் மற்றும் மைக்ரோ பைனான்ஸ் (Micro Finance), கம்பெனியை முகவராகக் கொண்டு சுய உதவி குழு கடன் ஆகியவையும், இயக்குனர்களின் முழு அனுமதியுடன் கொடுக்க ஆரம்பித்து இருக்கிறோம்.

இயக்குநர்கள் குழு பற்றிக் கூறுங்களேன்?

தொழில் துறையில் முதிர்ந்த அனுபவமும், ஆளுமையும் கொண்ட முத்து ஃபார்மஸி குழுமத்தின் தலைவர் டாக்டர். ஏ.ஞானம் அவர்களின் தலைமையில் இயக்குனர்கள் குழு இயங்குவதே ஒரு பலமாக கருதுகிறோம். அதற்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில், கடன் வழங்கும் நிதி நிறுவனத்தில் அனுபவம் கொண்ட திரு. பழ.ராமசாமி அவர்களும், இரு சக்கர வாகன நிதி நிறுவனத்தில் அனுபவம் கொண்ட நானும், திரு. S. சிதம்பரம் அவர்களுடன் இருந்து வருவது ஒரு தனி சிறப்பு என்றே சொல்லலாம். திரு. சேதுராமன் சாத்தப்பன் அவர்கள் அமர்வும் மேலும் ஒரு தனி சிறப்பு.

தங்கள் குடும்பம் குறித்து கூறுவீர்களா?

நான் தேவகோட்டையில் மாத்தூர் உறையூர் பிரிவில் தெய்வத்திருவாளர்கள் அரு. சோமசுந்தரம் செட்டியார், முத்தாள் ஆச்சிக்கு மகனாக பிறந்து, சண்முகநாதபுரம் தெய்வத்திருவாளர்கள் உத்தமன் செட்டியார், மீனாட்சி ஆச்சி அவர்களுக்கு 1982 ஆம் ஆண்டு பிள்ளை வளர வந்து தேவகோட்டை தெய்வத்திரு KN. சிற்சபேசன் அவர்கள் மகள் மீனாக்ஷியை திருமணம் செய்துள்ளேன்.

எங்களுக்கு இரண்டு ஆண் மக்கள். மூத்த மகன் SM. ராம், MBA பட்டதாரி. மனைவி திருமதி சு. பூங்கோதை B.TECH (IT) பொன்.

புதுப்பட்டியில் பிறந்தவர்.

இரண்டாம் மகன் SM. லெட்சுமன் B.TECH (IT) பட்டதாரி. மனைவி திருமதி. லெ. நித்யகல்யாணி B.E (CIVIL) ஆ. தெக்கூரில் பிறந்தவர். இருவருக்கும் இரு குழந்தைகள் உள்ளனர்.

நான் கோயம்பத்தூரில் கடந்த 35 வருடங்களாக நிதி வணிகமும், காரைக்குடியில் கடந்த 10 வருடங்களாக மகளிர் தங்கும் விடுதியும், இரண்டு பாதுகாப்பு பெட்டக நிறுவனங்களும் நடத்தி வருகிறேன்.

காரைக்குடியில் எலெக்ட்ரிக் ஆட்டோ(Electric Auto) களுக்கு, என். கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் கடனுதவி செய்து வருகிறீர்கள். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

தற்பொழுது காரைக்குடியில் எலெக்ட்ரிக் ஆட்டோவிற்கு கடன் கொடுத்து வருகிறோம். இதன் நோக்கம் என்னவென்றால், சென்னையில் இருந்து காரைக்குடிக்கு பல்லவனில் வரும் நகரத்தார்களுக்கு, அவர்களுடைய கிராமங்களுக்கு இரவு நேரத்தில் குறைந்த வாடகையில் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறோம். இதில் காரைக்குடியை சுற்றி உள்ள நகரத்தார் தங்களின் ஊர்களுக்கு போக, ஆட்டோ உரிமையாளரிடமும் மற்றும் எங்கள் NKC நிறுவனமிடவும் பேசி கட்டணங்களை குறிப்பிட்ட காலத்திற்கு நிர்ணயம் செய்துள்ளோம். இதனால் ஆட்டோ ஓட்டுனர் நகரத்தார் பயணிகளுக்கு நன்கு சேவை செய்து இருசாராரும் பயனடைந்து வருகிறார்கள். நகரத்தார் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சிறப்புகளாக எதை கூறுவீர்கள்?

பங்குதாரர்களுக்கு, நிறுவனம் ஆரம்பித்தது முதல், வருடம் தவறாமல் ஈவுத் தொகையாக (டிவிடெண்ட்) வங்கி வட்டி விகிதத்திற்கும் மேலாக கொடுத்து வருவதும், போனஸ் பங்குகள் வழங்கியதும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறுவனம் கண்ட அசுர வளர்ச்சியும் என்றே கூறலாம்.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

www.nkcfinance.com

OUR SERVICE :

- 24 Hours Emergency & Trauma Care
- 24 Hours Ambulance Service
- 24 Hours Laboratory
- Air Conditioned Private Rooms
- Air Conditioned General Ward
- Fully equipped ICU
- Maternity Care
- Major Operation Theatres
- X-Ray & Ultrasound
- Multi speciality Consultation
- Physiotheraphy & Rehabilitation
- Dental and Maxillofacial Surgery

WHY CHOOSE US

With 50+ years of trusted healthcare, we're a fully air-conditioned multispeciality hospital offering expert doctors, advanced facilities, and compassionate care—all under one roof.

MUTHU GROUP SINCE 1970

MUTHU HOSPITAL
Perambur

CONTACT US :

+91 7397 310 543
044 7962 0543

336, Paper Mills Road, Perambur

muthuhospitalperambur.com

NKC FINANCE PRIVATE LIMITED

(RBI REGISTRATION No.N-07-00846)

Registered & Corporate Office:
25/55 Egmore High Road, Egmore, Chennai 600008.
Phone Number: 044-26202064
Phone Numbers: 92800 85934, 92800 85935
Ponnamaravathi: 92800 85940
Email: nkcfin18@gmail.com, Website: www.nkcfinance.com

WE EXTEND THE FOLLOWING LOANS:

- **Loan against Property at competitive rate of Interest. (Repayment up to 60 months)**
- **Business Loans (Short Term, Long Term and Line of Credit) against Property**
- **Instant Loan against Jewellery**

» Basic Requirements: Acceptable CIBIL/CRIF Score, proof for Income/ Revenue Generation with 12 months Bank Statements.

» In Principle sanction will be given within 3 working days and regular Sanction will be given within 7 working days.

» Processing Charges, Pre-closing charges are the lowest. No hidden Charges. Simple Documents, quick decisions and Hassle-free procedures.

Quantum:

Rs. 5 Lakhs - Rs. 50 Lakhs

GNANAM.E
Chairman
PH-98843 82828

RAMASAMY.P
Managing Director
PH-92800 85934

CHIDAMBARAM.S
Joint Managing Director
PH-92800 85935

SOMASUNDARAM.O
Director
PH-93631 02923

SETHURAMAN SATHAPPAN
Advisor
PH-98204 51259

Senthoor
RESIDENCY
வீடுகள், அறைகள்
நாள் மற்றும் மாத
வாடகைக்கு விடப்படும்
17/2, Nethaji Road, Behind Mathoor Valagam, Near New Bus Stand,
KARAIKUDI - 630 003
Cell : 9994858735



TDS பிடிப்பதை தவிர்க்க உதவும் படிவம் எண் 121

V.RAMASAMY, B.Com., F.C.A.
Chartered Accountant
COIMBATORE
ramsfca@gmail.com

படிவ எண் 121 என்பது இந்தியாவில் 2026 - 2027 வரி ஆண்டிலிருந்து அமலுக்கு வந்த ஒருங்கிணைந்த சுய அறிவிப்பு (self-declaration) படிவமாகும். இது முன்பு பயன்படுத்தப்பட்ட 15G மற்றும் 15H படிவங்களுக்கான மாற்றுப் படிவம் ஆகும்.

படிவத்தின் நோக்கம்

நிதியாண்டிற்கான உங்கள் கணிக்கப்பட்ட மொத்த வருமானத்திற்கு வரி இல்லை என்று அறிவிக்க, இதன் மூலம் TDS பிடித்தலைத் தவிர்க்க உதவுகிறது.

மாற்றுப் படிவம்

60 வயதிற்குக் குறைவானவர்களுக்கான Form 15G மற்றும் மூத்த குடிமக்களுக்கான Form 15H ஆகியவற்றை ஒரே படிவமாக மாற்றுகிறது.

யார் படிவம் 121 சமர்ப்பிக்கலாம்?

- பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் குடியிருப்பு வரி செலுத்துநர்கள் அனைவரும் (வயதைக் கருத்தில் கொள்ளாமல்) படிவம் 121-ஐ சமர்ப்பிக்கலாம்:
- இந்தியாவில் வசிக்கும் தனிநபர்கள் (மூத்த குடிமக்கள் உட்பட)
- இந்து கூட்டு குடும்பங்கள் (HUF)
- சில டிரஸ்ட் போன்ற பிற தகுதியான assessee-கள் (மொத்த வருமானம் வரி வரம்பிற்கு கீழே இருந்தால்)

படிவம் 121 சமர்ப்பிக்க தகுதி நிபந்தனைகள்

- வரி செலுத்துநர் இந்தியாவில் குடியிருப்பாளராக இருக்க வேண்டும்
- கழிவுகள் மற்றும் விலக்குகளுக்குப் பிறகு, ஆண்டிற்கான மொத்த வரி பொறுப்பு பூஜ்யமாக இருக்க வேண்டும்
- TDS பிடிப்பதற்கு முன் இந்த அறிவிப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

யார் படிவம் 121 சமர்ப்பிக்க முடியாது?

- பின்வரும் நபர்கள் / நிறுவனங்கள் படிவம் 121 சமர்ப்பிக்க முடியாது:
- வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் அதாவது Non Resident Indians (NRI)
- நிறுவனங்கள் மற்றும் கூட்டுஸ்தாபனங்கள்
- வரிக்குட்பட்ட வருமானம் மற்றும் வரி பொறுப்பு உள்ளவர்கள்
- படிவம் 121-ல் உள்ளடக்கப்படும் வருமானங்கள்

வரி ஆண்டு 2026 - 27 மற்றும் அதன் பின்னர், பின்வரும் வருமானங்களுக்காக தகுதியானவர்கள் படிவம் 121 சமர்ப்பிக்கலாம்:

- வங்கி நிரந்தர வைப்பு (FD) மற்றும் சேமிப்பு கணக்குகளில் வட்டி
- தபால் நிலைய வைப்பு வட்டி
- பத்திரங்கள் அல்லது பிணைப்புகளில் (bonds) வட்டி
- பங்குதாரர் லாபம் (dividend income)



- மியூச்சுவல் ஃபண்ட் வருமானம்
- வாழ்க்கை காப்பீட்டு தொகைகள்
- EPF / PF பணம் பெறுதல் மற்றும் ஓய்வூதியம்
- காப்பீட்டு கமிஷன்
- வாடகை வருமானம்
- TDS பொருந்தும் பிற குறிப்பிடப்பட்ட வருமானங்கள்

இந்தப் படிவத்தை யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும்

இந்த படிவம் நேரடியாக பணம் வழங்குபவர்களுக்கு (வங்கிகள், நிதி நிறுவனங்கள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும். TDS தவிர்க்க ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்குத் தேவையான மற்ற ஆதாரங்கள் என்ன:

செல்லுபடியாகும் PAN (ஆதாருடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்) அவசியம். செயலிழந்த PAN இருந்தால் 20% அதிக TDS விதிக்கப்படும்.

படிவம் 121 பகுதி A

பகுதி A என்பது வரி செலுத்துநர் அல்லது அறிவிப்பு வழங்குநரின்

அடிப்படை விவரங்களை பதிவு செய்யும் முதல் பகுதி. இது அனைத்து தகுதியான விண்ணப்பதாரர்களாலும் நிரப்பப்பட வேண்டும்.

பகுதி A-ல் தேவையான விவரங்கள்:

- வரி செலுத்துநரின் பெயர்
- PAN (நிரந்தர கணக்கு எண்)
- குடியிருப்பு நிலை (இந்தியாவில் குடியிருப்பாளர் ஆக இருக்க வேண்டும்)
- வரி ஆண்டு
- முழுமையான முகவரி (PIN code உடன்)
- மின்னஞ்சல் மற்றும் மொபைல் எண்

வருமானத்தின் தன்மை

- பகுதி A, வரி செலுத்துநரின் அடையாளம், தொடர்பு விவரங்கள் மற்றும் தகுதியை உறுதிப்படுத்துகிறது.
- படிவம் 121 பகுதி B
- பகுதி B-ஐ, அறிவிப்பைப் பெறும் பணம் வழங்குநர் அல்லது TDS பிடிக்கும் நபர் (வங்கி, நிறுவனம் போன்றவை) நிரப்ப வேண்டும்.
- பகுதி B-ல் தேவையான விவரங்கள்:
- பெயர் மற்றும் முகவரி
- TAN மற்றும் PAN
- மின்னஞ்சல் மற்றும் தொடர்பு எண்
- வரி ஆண்டு
- தனித்துவ அடையாள எண் (UIN)
- கணிக்கப்பட்ட வருமானம்
- கணிக்கப்பட்ட மொத்த வருமானம்
- அறிவிக்கப்பட்ட மொத்த வருமானம்
- அறிவிப்பு பெறப்பட்ட தேதி

- பகுதி B, வருமானத்தை வழங்கும் நிறுவனம் அல்லது நபர் சார்ந்த தகவல்களை பதிவு செய்ய பயன்படுகிறது.

படிவம் 121 எப்படி நிரப்புவது?

- நிதியாண்டிற்கான உங்கள் மொத்த வரிக்குட்பட்ட வருமானத்தை கணக்கிட்டு, அதற்கான வரி பொறுப்பை (tax liability) கணக்கிடுங்கள்
- உங்கள் மொத்த வரி பொறுப்பு பூஜ்யமாக இருந்தால், நீங்கள் படிவம் 121 சமர்ப்பிக்க தகுதியானவர்.
- வருமான வரித்துறையின் இணையதளத்தில் இருந்து படிவம் 121 PDF-ஐ பதிவிறக்கம் செய்யுங்கள்.
- பகுதி A-யை நிரப்புங்கள். இதில் அறிவிப்பு வழங்குநரின் விவரங்கள் (PAN, பெயர், முகவரி, குடியிருப்பு நிலை, வருமான விவரங்கள் மற்றும் பிற தகவல்கள்) அடங்கும்.
- பணம் வழங்குநரின் (payer) விவரங்களை உள்ளிடுங்கள். உதாரணமாக, வங்கி அல்லது நிறுவனத்தின் TAN.
- படிவத்தில் கையொப்பமிட்டு, அந்த ஆண்டிற்கான TDS பிடிப்பதற்கு முன், அதை பணம் வழங்குநரிடம் சமர்ப்பிக்கவும்.

படிவம் 121 எப்படி சமர்ப்பிப்பது?

- TDS பிடித்தலைத் தவிர்க்க, வரி செலுத்துநர் ஒவ்வொரு பணம் வழங்குநருக்கும் தனித்தனியாக படிவம் 121-ஐ சமர்ப்பிக்க வேண்டும்.
- வரி செலுத்துநர்கள் இந்த படிவத்தை கைமுறையாக (manual) அல்லது சம்பந்தப்பட்ட வங்கி / நிறுவனத்தின் ஆன்லைன் வசதி மூலம் சமர்ப்பிக்கலாம்.
- வருமானம் உங்கள் கணக்கில் வருவதற்கு முன்பே, அதாவது TDS பிடிப்பதற்கு முன்பே, படிவம் 121 சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- வரி செலுத்துநர் படிவம் 121 சமர்ப்பித்த பிறகு, பணம் வழங்குநர் (வங்கி அல்லது நிறுவனம்) அந்த படிவத்தின் பகுதி B-ஐ வருமான வரி e-filing தளத்தில் பதிவேற்றம் செய்வார்.

92800 85940
என்.கே.சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
We Listen You Prosper
(இந்திய ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற வங்கி சாரா நிதி நிறுவனம்)
NKC FINANCE PRIVATE LIMITED
நகை அடமானக் கடன்
தங்க நகைகள் தரம் பார்க்கும் வசதி
Gold, Silver Ornaments Testing Facility
Door No: 2/9B, பஜார் மெயின்ரோடு, INDANE GAS எதிரில்,
பொன்-புதுப்பட்டி - 622 407. பொன்னமராவதி.புதுக்கோட்டை மாவட்டம்.

ELEVATE YOUR WORLD.
Reliable. Efficient. Connected.
We keep you safe:
Built with care.
Fast and smart:
Always ready for you.
Good for the planet:
Saves energy, too.
Here when you need us:
Help is just a call away.
Get Free Quote:
7299012340, 9042967057, 6381361322
MUTHU GROUP
SINCE 1970
MAGNETECH
ELEVATORS PVT.LTD.

ஹெல்த் இன்சூரன்ஸ் எடுக்கும் போது நாம் செய்யும் தவறுகள்

சேதுராமன் சாத்தப்பன்
Advisor,
NKC Finance Private Limited

பெரும்பாலான கிளைம் சிக்கல்கள் துரதிர்ஷ்டத்தால் வருவதில்லை - அவை மிகவும் முன்னதாகவே எடுக்கப்பட்ட பல முடிவுகளிலிருந்து வருகின்றன.

நீங்கள் ஹெல்த் இன்சூரன்ஸ் வாங்கும்போது கம்பெனிகளுக்கிடையே பிரீமியங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள், சலுகைகளைத் தவிர்க்கிறீர்கள், ஆவணங்களைப் பதிவேற்றிவிட்டு பாலிசியை பெறுகிறீர்கள். பாலிசி உங்கள் இன்பாக்ஸில் அமைதியாக

அமர்ந்திருக்கும், பல ஆண்டுகளாகத் தொடப்படாமல் இருக்கும். உங்களுக்கு உண்மையில் அது தேவைப்படும் போது சிக்கல் தொடங்குகிறது. மருத்துவமனையில் சேர்ப்பது காகித வேலைகளை உண்மையானதாக மாற்றுகிறது, மேலும் சில கவனிக்கப்படாத விவரங்கள் கிளைம் செய்வதை தாமதப்படுத்தலாம், குறைக்கலாம் அல்லது தடம் புரளச் செய்யலாம். இந்தத் தவறுகள் உங்களுக்கு மட்டும் நடப்பதில்லை, அவை பொதுவானவை - மேலும் அவை பொதுவாக மோசமான தருணத்தில் தோன்றும்.

பிரீமியங்கள் விலை கூடுதலாக இருப்பதால் காப்பீடு அளவு குறைவாக உள்ளது

தவறுகளில் ஒன்று மிகக் குறைந்த காப்பீட்டை வாங்குவது. நீங்கள் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும் போது ₹35 லட்சம் பாலிசி போதுமானதாக உணரலாம், ஆனால் மருத்துவ இன்பிளேஷன் பெரும்பாலான மக்கள் எதிர்பார்ப்பதை விட அதிகமாக இருக்கும். ஒரு பெரு நகரத்தில் ஒரு முறை மருத்துவமனையில் சேர்க்கப்படுவது காப்பீட்டுத் தொகையை விரைவாக குறைந்து விடும். ஆதலால் காப்பீடு வருடம் தோறும் சிறிது சிறிதாக கூடுமாறு பார்த்து கொள்ளவும்.

காத்திருப்பு காலங்கள் மற்றும் விலக்குகளைப் புரிந்துகொள்வதில்லை

பல பாலிசிதாரர்கள் பாலிசி செயலில் உள்ளவுடன், அனைத்தும் காப்பீடு செய்யப்படும் என்று கருதுகின்றனர். அது உண்மை அல்ல. முன்பே இருக்கும் நோய்கள், குறிப்பிட்ட நடைமுறைகள் மற்றும் சில அறுவை சிகிச்சைகள் கூட காத்திருப்பு காலங்களுடன் வருகின்றன. இதை தெரிந்து கொள்வது நல்லது.

பிரீமியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பாலிசியைத் தேர்ந்தெடுப்பது

குறைவாக பிரீமியம் இருப்பதை மட்டும் கவனிக்க கூடாது. மலிவான பாலிசிகள் பெரும்பாலும் அறை வாடகை வரம்புகள், இணை–பணம் விதிமுறைகள் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட மருத்துவமனை நெட்வொர்க்குகள் என்பதுடன் வருகின்றன. உரிமைகோரல் நேரத்தில், இது நீங்கள் எதிர்பார்க்காத விலக்குகளாக வருகிறது.

உடல் நிலை பிரச்சனைகளை முழுமையாகவோ அல்லது குறைவாகவோ இன்சூரன்ஸ் கம்பெனிகளிடம் சொல்லுவது.

இது தற்செயலாகச் செய்தாலும் கூட, மிகவும் கடுமையான தவறுகளில் ஒன்றாகும். உடல் நிலை சரியாகிவிட்டலோ அல்லது முக்கியமற்றதாகவோ உணரும் பழைய நோய்களைக் குறிப்பிடுவதை மக்கள் தவிர்க்கிறார்கள். ஆனால் காப்பீட்டாளர்கள் வாங்கும் நேரத்தில் வெளிப்படுத்தப்பட்டவற்றின் அடிப்படையில் ரிஸ்கை மதிப்பிடுகின்றனர். கிளைம் செய்யும் நேரத்தில், மருத்துவமனைகள் விரிவான மருத்துவ பதிவுகளைச் சமர்ப்பிக்கின்றன. முன்னர் அறிவிக்கப்படாத ஏதாவது ஒரு பிரச்னை அங்கு தோன்றினால், காப்பீட்டாளர் உங்கள் கிளைமை நிராகரிக்கலாம்.

நிதி - வணிகம் - முதலீடு

பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நிதி - வணிகம் - முதலீடு மின்னிதழ் “என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்” (NKC Finance Private Limited) நிறுவனத்தின் கீழ் வெளி வருகிறது. தமிழில் வர்த்தக கட்டுரைகள் எழுத ஆர்வம் உள்ளவர்கள் 250 - 300 வார்த்தைகளுக்கு மிகையாகாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும்.

SENTHOOR LOCKERS
SAFE. SECURE. YOURS.
Sri Ram Nagar, Kottaiyur
Behind MED PLUS, 29/1, Trichy Main Road, Sri Ram Nagar, Kottaiyur – 630106
SAFE. SECURE. YOURS.
YOUR BELONGINGS, OUR RESPONSIBILITY!
LOCKER DETAILS
SIZE (Inches)
14" x 20" x 22"
24" x 20" x 27"
SALIENT FEATURES
ADVANCED SECURITY
Digital Lock with Personal Access
24/7 CCTV SURVEILLANCE
Complete Safety Round the Clock
FIRE SAFE MATERIAL
High Quality Steel – Fire & Rust Resistant
AIR-CONDITIONED LOCKERS
Proper Air Circulation to Keep Belongings Fresh
CLEAN & HYGIENIC
Regular Cleaning for a Better Experience
MEMBER SUPPORT
Friendly Assistance Whenever You Need
9363002923
7010407383